# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரை சங்வர்தன சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1986, செப்ரெம்பர் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1986, செப்ரெம்பர் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 75

**1986 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரை சங்வர்தன சபை (கூட்டிணைத்தல்) சட்டம்**

*[1986 செப்ரெம்பர் 24 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ—ஓ 7/86
1791

**வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரை சங்வர்தன சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

"வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரை சங்வர்தன சபை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென மாத்தறையிலுள்ள வெஹெரஹேன என்னுமிடத்தில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதுமாகுக :—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரை சங்வர்தன சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரை சங்வர்தன சபையில் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரை சங்வர்தன சபை" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரை சங்வர்தன சபையைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) வெஹெரஹேன பூர்வாராம ராஜ மகா விகாரையின் பிரதான, துணைநிலைக் கட்டிடங்களை நிருமாணித்தலும் பேணிவருதலும் ;

(ஆ) சொல்லப்பட்ட விகாரையில் நடத்தப்படும் சிரி ரேவத மகா பிரிவேனையை முன்னேற்றுதல்.

(இ) சொல்லப்பட்ட விகாரைக்குச் சொந்தமான வாழ்க்கைத் தொழில், தொழினுட்ப பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல் ;

(ஈ) வருடாந்த ருகுணுஇல் மாத சமய விழாவையும் பெரஹெராவையும் நடாத்துதல் ;

(உ) சொல்லப்பட்ட விகாரையைச் சார்ந்த குழுக்களைப் பேணிவருதலும், சமூக சேவையைப் புரிதலும் ;

(ஊ) சொல்லப்பட்ட விகாரையிற் பிக்குகளுக்கு சிவுபசய வழங்குதல் ;

(எ) மேற்சொல்லப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கென நிதியமொன்றைத் தாபித்தலும், மேம்படுத்தலும், ஒழுங்குபடுத்தலும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு உகந்தனவான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல் .

நிறைவேற்றுக் குழு.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்ிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவர்களான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் சபையின் நிறைவேற்றுக்குழுவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

5. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அளிப்புக்களையும் கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்

தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல் வேலை நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

6. (1) பொதுக் கூட்டமொன்றில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றிலிரண்டு வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், மீளப்பெறுதல், வெளியேற்றுதல் என்பவற்றுக்காகவும், நிறைவேற்றுக் குழுவினதும், கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகவும், அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், பொதுவாக வேறுவகையில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்தப்பெறுவதற்காகவும், இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுதிலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(2) அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதி எதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய விதி எதுவும், கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு வாக்குப் பெரும்பான்மை கொண்டன்றி மாற்றப்படுதலோ திருத்தப்படுதலோ, ஒழிக்கப்படுதலோ அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படுதலோ ஆகாது.

(3) இச்சட்டம் தொடங்கும் நேரத்தில் வலுவிலுள்ள சபையின் விதிகள், அவை இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத வரையில், இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. இந்தச் சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சபைக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சபைக்கு வருமதியான எல்லாக் கடன்களும், சபைக்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும், கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும். சபையினால் செலுத்தப்படற்பாலனவானவும் சபைக்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிறைவேற்றுக் குழுவின் மூன்று உறுப்பினர்கள் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்கள் தாம் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**9.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளைப் பங்கப்படுத்துவதாதலோ பாதிப்பதாதலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.